மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) வணக்கத்திற்குரிய மாநகர் மேயர் அவர்கள் இறக்குமதி செய்யப்படும் சீருந்து வேண்டுமென முன்னுரில் கோரினர்கள்.

(இ) வணக்கத்திற்குரிய மாநகர் மேயர் அவர்கள் ஒரு அம்பாசிடர் (சீருந்து) **Car** மட்டும் தற்போது கோரியுள்ளார். இஃது கவனிப்பிலுள்ளது.

Town Hall, Madurai

* 80. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a Town Hall in Madurai; and

(b) if so, the details thereof?

நகர மண்டபம், மதுரை

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் நகர மண்டபம் ஒன்று கட்டும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரையில் நகர மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனல், நகர மண்டபம் கட்டுவதற்கான திட்டம் மதுரை மாநகராட்சியின் பரிசிலனையில் உள்ளது.

(இ) இத்திட்டம் குறித்த மனைப்பிரிவு நகரமைப்பு இயக்குநரின் பரிசிலனையில் உள்ளது.